**தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 206 - கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 02 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 857.14 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 750.97 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 106.17 மில்லியன் அதாவது 12.39 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 522.19 | 512.29 | 9.90 | 1.90 |
| மூலதனம் | 334.95 | 238.68 | 96.27 | 28.74 |
| **மொத்தம்** | **857.14** | **750.97** | **106.17** | **12.39** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 23.00 | 22.99 | 9.50 | 13.41 | 70.00 | 58.17 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 44.93 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0054/000 | 0.13 |
| 6000/0000/00/0013/0026/000 | 5.03 |
| 6000/0000/00/0016/0005/000 | 39.77 |
| மொத்தம் | **44.93** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 46 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 698,415 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகளில் செலவிடப்படாது எஞ்சியிருந்த ரூபா 244,630 கூட்டுத்தொகை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த செயல்நிமித்த உபகட்டுநிதி 06 நாட்கள் முதல் 65 நாட்கள் வரையான காலம் தாழ்த்தப்பட்டு காசாக தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களினுள் 21 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த செயல்நிமித்த உப கட்டுநிதிக்காக மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபகட்டு நிதிகளில் குறித்த பணியை நிறைவு செய்த பின்னரான சேமிப்பு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 20 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தின் 2016 சனவரி 07 ஆந் திகதிய 2/2016 ஆம் இலக்க அலுவலக கட்டளையின் 2.6 ஆம் உப பிரிவிற்கமைய பெறப்பட்ட முற்பணத்தொகை மதிப்பீட்டிற்கமைய செலவிடப்பட வேண்டிய போதிலும், மதிப்பிடப்பட்ட தொகைக்கு ஒப்பாக செலவினம் 28 சதவீதத்திலிருந்து 170 சதவீதம் வரை அதிகரித்த 12 சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

--------------------------------

2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5,574,630 கூட்டுத்தொகையான 45 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

------------------------------------------------------------------------------------------------------------------------

20601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 306,411 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனிப்பட்ட கடன் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைகளும் திணைக்களத்தின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதிக்கும் இடையே ரூபா 96,391 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த வேறுபாட்டில் ரூபா 3,600 இற்காக காரணங்கள் மாத்திரம் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 92,761 தொகையான வேறுபாட்டினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இணக்கம் செய்து தீர்ப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கிடையே பல வருடங்களாக தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 444,761 தொகையான இணக்கம் செய்யப்படாத

மீதியொன்று நிலவியது. அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் இணக்கம் செய்து திருத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 உள்ளகக் கணக்காய்வு

2011 யூலை 28 ஆந் திகதி முதல் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. உள்ளக நடவடிக்கைகள் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் திணைக்களத்தின் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது 03 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

தேசிய கலாபவனிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 85,833 பெறுமதியான மெபர் டிரம்ஸ் செட் ஒன்று 08 வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2015 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்கு குறைவான காலமாக இருந்துவரும் ரூபா 27.54 மில்லியன் தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டன.

### 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | - | தேசிய கலாபவனிற்கு வழங்கப்பட்ட GT-10 கிட்டார் பெடலொன்று 2011 ஆம் ஆண்டு முதலாகவும், 12 சங்கீத உபகரணங்கள் மற்றும் கருவிகளின் உருப்படிகள் 2001 ஆம் ஆண்டு முதலாகவும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்ட |

| | |
|---|---|
| | போதிலும், இது தொடர்பில் நிதிப்பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) அமைச்சரவை தீர்மானம்**

| | |
|---|---|
| 2004 மே 12 ஆந் திகதிய 211,688 04/0427/020/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களின் அனைத்து அறிவித்தல்களும் அரச அச்சீட்டு ஊடக நிறுவனமொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான அரச சிறுவர் நாடக விழாவிற்காக 5 பத்திரிகை அறிவித்தல்கள் தனியார் அச்சீட்டு ஊடகங்களில் வெளியிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.10 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராத சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(i) கலையகங்களின் திறனாளிகள் குழாமை நிறுவுதல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், மாவட்ட மற்றும் பிரதேச தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் 54 திறனாளிகளுடன் கூடிய நடனமாடும் குழாமைக் கட்டியெழுப்புதல் அதன் பிரதான நோக்கமாக இருந்தது. அவ்வாறே மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட திறனாளிகளில் தெரிவு செய்யப்பட்ட 1000 பேருடன் கூடிய தேசிய நடனக் குழாமைக் கட்டியெழுப்புதலும் இலக்கிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் 2017 ஒக்தோபர் மாதமளவில் செயலிழந்து காணப்பட்டதுடன், போதியளவான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கமை அதற்கான பிரதான காரணம் என கலாசார பணிப்பாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மஹாவம்சம் vi தொகுதியின் ஒருங்கிணைப்பு (1978-2010) இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 5.32 மில்லியன் எஞ்சியிருந்ததுடன், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் சுமார் 47 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iii) ஜோன் த சில்வா ஞாபகார்த்த திரையரங்கினை புதுப்பிக்கும் பணிகள் 2011 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 சனவரி 25 ஆந் திகதி திருத்தப்பட்ட மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 1,289 மில்லியன் ஆகும். நிர்மாணம் இரண்டு கட்டங்களில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 385.96 மில்லியன் கைவிடப்பட்டிருந்தது. அதற்கமைய முதலாவது

கட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 81 சதவீதமாக இருந்ததுடன், இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. திரையரங்கின் நவீனமயப்படுத்தல் பணிகளில் பாரிய காலதாமதமொன்று அவதானிக்கப்பட்டது.

**3.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வழங்கிய போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 777,834 பெறமதியான காசோலைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 5,900 மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 22,391 ஆன போதிலும், அந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு திருத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதியின் iii ஆவது அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத “பயிற்சி ஆலோசனையாளர்” எனும் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட நபரொருவருக்கு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 25,000, ரூபா 233,051 மற்றும் ரூபா 192,248 படியாக ரூபா 450,299 கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

விஷ்வகோஷ அலுவலகத்தினை நடாத்தி செல்வதற்காக 2007 சனவரி மாதம் முதல் மாதாந்தம் ரூபா 260,000 தொகைக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 3653 கன அடி நீளமான கட்டிடத்தின் 1198 கன அடி பரப்பளவான காணி 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஒக்தோபர் மாதம் வரையிலும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**3.12 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 3.12 (அ) மற்றும் (ஆ) | மஹாவம்ச அலுவலகத்தின் இணைப்பாளரால் 2014 ஆம் ஆண்டின் போது ஒழுங்கமைத்தல் குழுக்கூட்டத்திற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 70,000 தொகையான முற்பணத் தொகை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரின் சாரதியின் இலங்கை வங்கி தனிப்பட்ட கணக்கிற்கு செலவு |

வைக்கப்பட்டிருந்தது. பின்னர் மஹாவம்ச அலுவலகத்தின் ஒழுங்கமைத்தல் குழுக்களின் அங்கத்தவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு போலியான கையொப்பமிடப்பட்ட பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இணைப்பாளரால் 2015 மே 25 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிவிப்பொன்றை வழங்கியிருந்தார். உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்றினை மேற்கொண்டு மேற்படி நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், விசாரணை நடவடிக்கைகளில் நீண்ட தாமதமொன்று அவதானிக்கப்பட்டது.

**3.13 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளும் கலைஞர்களுக்காக 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ‘‘சரஸ்வதி’’ ஓய்வூதிய முன்மொழிவு முறையின் கீழ் உரிய திகதியில் தவணைப் பணத்தினை அனுப்பாமை, முன்மொழிவு முறைக்கு தேவையான அனுமதிகளை பெற்றிராமை, ஓய்வூதிய வேலைத்திட்டம் குறிப்பாக பதிவு செய்யப்பட்டிராமை மற்றும் நலனாளிகளை இணைத்துக் கொள்வதற்கான நடைமுறையொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருக்காமை போன்ற காரணங்களின் நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பங்களிப்பு மட்டுப்படுத்தல், வயதெல்லையை விஞ்சுவதால் ஓய்வூதிய நலன் கிட்டாத ஒரு பகுதியினர் உருவாகுதல், உயர் விகிதாசாரமொன்றினை ஓய்வூதியத்திற்கு உள்வாங்குவதற்கு முடியாதுள்ளமை போன்ற விடயங்களை கவனத்திற் கொள்ளும் போது, இந்த ஓய்வூதிய முறைமையின் கலைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்களை வழங்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. அவ்வாறே இந்த நிலைமைக்கு நிதியேற்பாடுகளின் பற்றாக்குறை பிரதான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இதற்காக உரிய நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை நிதியேற்பாடுகள் கிடைக்காமைக்கான காரணமாக அமைந்திருந்தது. மேற்படி விடயங்களுக்கமைய இது தோல்வியடைந்தமை தொடர்பில் முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**3.14 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 14 | 14 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 599 | 538 | 61 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 87 | 108 | - | 21 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 82 | 28 | 54 | - |
| | **மொத்தம்** | **799** | **690** | **130** | **21** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப நிலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 21 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.